✠ அன்பே கடவுள் ✠

சிலுவைப்பாதை

- மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

முன்னுரை

தவக்காலம் அருளின் காலம் என்கின்றோம்.

ஒவ்வொரு ஆண்டும் தரப்படுகின்ற அற்புதமான காலம்.

இந்த ஆண்டும் இந்தக் காலத்தை காணும் பாக்கியத்தைத் தந்தவருக்கு நன்றி சொல்லி, இந்தக் காலத்தின் சிறப்பான வழிபாடாகிய சிலுவைப்பாதையை செய்திட முன்வருவோம்.

இறையருள் பெறுவோம்.

இறைவனோடு இணைந்தே பயணிப்போம். எதிர்நோக்கின் பயன், பலன் பெறுவோம்.

தூய ஆவியே துணையாக வாருங்கள்.

அன்னைமரியே! கன்னித்தாயே! ஆழ்ந்து சிந்தித்து, அகவிடுதலை காண துணை செய்யுங்கள்.

ஆமென்!

முதல் நிலை – தீர்ப்புகள்

தீர்ப்புகள் என்னவாகும்?

தீர்ப்புகள் திருத்தப்படலாம் என எதிர்நோக்கி இருப்போர் ஏராளம் ஏராளம்.

மறைத்திரு. ஸ்டேன் சுவாமிகள் சிறையில் வைக்கப்பட்டு, உண்மை வெளிவராதா? எனக் காத்திருந்து, காத்திருந்து அவரும் மறைந்து போனதுதான் உண்மை. உண்மை உறங்க வைக்கப்பட்டு விட்டது ஆளும் வர்க்கத்தால்.

நமக்குத் தெரிந்தது இவருடைய தீர்ப்பு. இன்னும் எத்தனையோ பேருடைய தீர்ப்புகளில் உண்மை வராதோ? என எதிர்பார்த்து நிற்போர் பலர் உண்டு.

யூபிலி விழாவில் பலர் விடுவிக்கப்படுவார்கள் என்பதுதானே உண்மையென்றால், செபிப்போம், இத்தகையோருக்காக.

தீர்ப்புகளை எதிர்பார்த்து இருப்போரின் மன அமைதிக்காகச் செபிக்கின்றோம். நீதியானத் தீர்ப்பைப் பெற்று, உண்மையாக வாழ்ந்து, குடும்பத்தோடு மகிழ்ந்திருக்க அருள்தாரும். – ஆமென்.

இரண்டாம் நிலை – பாரச்சுமை

யார் வரி செலுத்தக் கடமைப்பட்டவர்கள்?

நாட்டில் வாழ்வோரா? இல்லை, வாழ வந்தோரா?

வரிச்சுமையால் விழி பிதுங்கி நிற்கும் ஏழை எளியவரின் வாழ்வு ஒருபோதும் உயராதோ?

நாட்டில் மட்டும் அல்ல, சார்ந்து இருக்கும் மறையில் கூட இன்று விழாக் கொண்டாட்டங்கள் பெருத்துப் போய் இருப்பது யாரைக் கேலி செய்கின்றது? ஆண்டில் எத்தனை விழாக்கள்? யாருக்காக? இறைவனின் அதிமிகு மகிமைக்காகவா?

வரிச் சுமையால் முதிர்கன்னிகளாக வாழ்வோருக்கு வழியென்ன?

வரிச் சுமையால் வீடற்றோருக்கு, படிக்க இயலாத நிலையால் பரிதவிப்போருக்கு, மருத்துவம் பார்க்க இயலாதவர்களுக்கு, விவசாயம் செய்ய இயலாத நிலையில் மரிப்போருக்கு, இது போன்றவர்களுக்கு விடுதலையுண்டா?

இறைவா, பாரச்சுமையை அகற்றும் நல்ல வழிகாட்டும் தலைவர்களை தரணிக்குத் தாரும். – ஆமென்.

மூன்றாம் நிலை – விழுதல்

அன்றாட வாழ்வில் எத்தனை எத்தனை அழுத்தங்கள்?

வரிச்சுமையால், படி! படி!! என்ற அழுத்தங்கள், குடிவெறியால், போதையால் தள்ளாடும் மனங்கள், உழைப்புக்கு ஏற்ற பொருளாதார நிலை உயர்வு இல்லாதவர்கள், இவ்வாறு பலர் தற்கொலை செய்து மடிவது என்பது அன்றாடச் செய்தியாகி வருகின்றது.

பரபரப்பாய் புள்ளிவிவரங்களைத் தரும் ஊடகங்கள்.

மனித வாழ்வு சாவில் நிறைவடையும் என்பது உண்மையென்றாலும், பிறந்ததன் பயன் அடையாது, தங்களையே மாய்த்துக் கொள்வது என்பது எவ்வளவு பரிதாபமானது?

கடைசி மூச்சை நிறுத்த மனிதனுக்கு அதிகாரமில்லையென்றாலும், நிர்ப்பந்திக்கப்படுகின்றான் என்பது வேதனையானதே.

வாழ்வின் எதிர்பார்ப்புகள் பலன் கொடுக்காதோ எம் இறைவா!

பாரம் தாங்காமல் விழுவோரின் வாழ்வில் நல்ல விடிவைத் தாரும் இயேசுவே! – ஆமென்.

நான்காம் நிலை – சந்தித்தல்

ஒருவரை ஒருவர் சந்திப்பதே, ஊக்கம், ஆக்கம் பெறத்தானே!

சந்திப்பதன் எதிர்பார்ப்பும் அதுதானே!

கன்னிமரியின் சந்திப்பின் எதிர்பார்ப்பு, அன்னை எலிசபெத்துக்கு ஊக்கம்தானே!

நோயாளிகளைச் சந்தித்த இயேசு நலத்தையும், நம்பிக்கையையும்தானே கொடுத்து உதவினார்.

இன்னாரைச் சந்தித்தால் விடை கிடைக்கும், வழி பிறக்கும் என்ற நோக்கில்தானே நாமும் வாழ்வில் பலரைச் சந்திக்கின்றோம்.

கூட்டுத்திருஅவையின் நோக்கமும் அதுதானே.

சந்திப்பில் ஊக்கம் அளித்து, ஊக்கம் பெற்று, தொடர்ந்து பயணிக்கும் பயணியாக வாழத்தானே அழைப்பு பெற்று இருக்கின்றோம்.

இறைவா! சந்திப்பைச் சாதனையாக்க உம் மன உணர்வைத் தாரும். – ஆமென்.

ஐந்தாம் நிலை – சீமோன் உதவி

எதிர்நோக்கின் திருப்பயணிகள் நாம், நமது பயணத்தில் எதிர்கொள்ளும் ஒரு அற்புத காரியம், அறியாத மாந்தர்க்கு உதவி செய்தல்.

இந்த வாய்ப்பினைப் பெறுவோம் என்பது உறுதி.

வயலில் இருந்து வந்தவருக்கு வரலாற்றில் இடம் கிடைத்தது.

அறியாத நேரத்தில், புரியாத சூழலில் உதவி செய்யப் பணிக்கப்படுகின்றார்.

நம்முடைய வாழ்விலும்கூட இத்தகைய சந்தர்ப்பச் சூழல் ஏற்படும் என்பது உண்மையே.

கொரோனா காலத்தில் அறியாத பலருக்கு, தெரியாத பலர் செய்த உதவி, எண்ணிப் பார்க்கச் செய்கின்றது.

மனமுவந்து செய்யும் எந்த உதவிக்கும், ஆண்டவருக்கு என்றே பணிவிடை செய்யும் நமக்கு அவரே பதில்மொழி தருவார் என்பதுவே உறுதி.

இறைவா! இத்தகைய சூழலில் நாங்கள் வேறுபாடுகளைக் களைந்து உதவிட வரமருளும். – ஆமென்.

ஆறாம் நிலை – வெரோணிக்கா

எதிர்நோக்கின் திருப்பயணத்தில் இடர்பாடுகள், இன்னல்கள் நேரும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. இச்சூழலில் துணிவு மிகவும் அவசியமானது.

கோழைகளாக அஞ்சி, ஒதுங்கிச் செல்லுவது, கிறிஸ்தவ வாழ்வு அல்ல என்பதனையே இந்த நிலை உணர்த்துகின்றது.

பவுல் திமொத்தேயுவுக்குக் கூறுவார், கடவுள் நமக்கு கோழை உள்ளத்தை அல்ல, வல்லமை, அன்பு, கட்டுப்பாடு கொண்ட இதயத்தையே தந்துள்ளார் என்று.

அருட்செல்வி மரியா, மறைத்திரு. ஸ்டேன் சுவாமிகள் நம்முடைய சமக்காலத்தில் நமக்கு கற்றுத் தந்துள்ள பாடமும் இதுவே.

எதிர்நோக்கின் திருப்பயணத்தில் சந்தித்த இடர்களை, இன்னல்களை எதிர்கொண்டு, சந்தித்து, சோதனையை சாதனையாக்கி, பாடம் சொல்லித் தந்துள்ளார்கள்.

இறைவா! இத்தகைய மனத்துணிவை எமக்கும் தாரும். – ஆமென்.

ஏழாம் நிலை – மண்ணில் மனிதர்

எதிர்நோக்கின் திருப்பயணிகள் நாம் சந்திக்கும் மற்றொரு சவால், பயணத்தைத் திசை திருப்பும் காரணிகள்.

கண்ணுக்குப் புலப்படாதவற்றில் உறுதி கொண்டு பயணிப்பதே எதிர்நோக்கு. அந்த எதிர்நோக்கை குலைக்கும் வகையில், நம்மை திசை மாற்றமடையச் செய்ய பல யுக்திகளை, கர்ச்சிக்கும் சிங்கமாக அலைந்து திரியும் சாத்தான் நம்மை விழத்தாட்டச் செய்து வருகின்றது என்பதுவே உண்மை.

இன்றைய காலச் சூழலில் கைப்பேசி, ஊடகங்கள், கணினி, தனிமனித துதி எனப் பல காரியங்கள் மனிதனை நிலைகுலையச் செய்கின்றது. மனிதனை இறைவனிடமிருந்து பிரிந்து போகச் செய்கின்றது.

ஏதோ ஒன்றுக்கு இன்று அடிமைப்பட்டு, நாம் கடவுளின் மக்கள் என்ற நிலையில் இருந்து விலகிப் பிரிந்து திசைமாறிச் செல்லும் சவால்கள் அதிகரித்து வரும் நிலையில் விழிப்போடும் எச்சரிக்கையோடும் நடந்து கொள்வது காலத்தின் கட்டாயம்.

இறைவா! இத்தகைய தெளிவானப் பார்வையை எமக்கும் தாரும். – ஆமென்.

எட்டாம் நிலை – மகளிரின் கண்ணீர்

எதிர்நோக்கின் திருப்பயணிகளின் மற்றொரு சாவல்.

எந்தச் சமூகம் பெண்ணை மதிப்புக்கு உரியவராகக் கருதாது, அவர்களுக்கு அநீதி விளைவிக்கின்றதோ, அந்தச் சமூகம் ஏற்றத்தாழ்வு கொண்ட சமூகம். அந்தச் சமூகம் எதிர்நோக்கின் இலக்கை அடைய முடியாது என்பதுவே உண்மை.

எந்தச் சமூகம் எல்லாரும் சேர்ந்து, இணைந்து, இயைந்து பயணிக்கின்றதோ அதுவே சரியான இலக்கை அடைந்திட முடியும்.

பெண் சமூகம் பலவகைகளிலும் பாதிப்புக்குள்ளாகி, அழுது கொண்டே இருக்கின்றதே, அங்கு இன்னும் கிறிஸ்து அறையப்பட்டுக் கொண்டேயிருக்கின்றார் என்பதுவே உண்மை.

சமத்துவம் இல்லாத எந்த திருப்பயணமும், பயணத்தின் வெற்றியைப் பெற்றிட முடியாது என்பதுதானே நிதர்சனம்.

சமத்துவ சமூகத்தைக் கட்டியெழுப்ப வரம் தாரும் இறைவா! – ஆமென்.

ஒன்பதாம் நிலை – மறுபடியும்!

நோயுற்றவன் நலம் பெற்றான். சந்தித்த இயேசு அவனிடம், "நீர் நலமடைந்திருக்கின்றீர். இதைவிடக் கேடானது எதுவும் உமக்கு நிகழாதிருக்க இனிப் பாவம் செய்யாதீர்" என்றார். யோவான் 05 : 14

யோவான் 08 : 11 இயேசு, "நானும் தீர்ப்பிடேன். இனிப் பாவம் செய்யாதீர்" என்றார். மறுபடியுமா?

பாவத்திற்கு மேல் பாவம் செய்து பாவமன்னிப்பு குறித்து, அச்சமில்லாது போகாதே. சீராக் 5 : 5

பாவம் செய்யும் மனிதன், கிறிஸ்துவை விழச் செய்கின்றான். கிறிஸ்தவ விழுமியத்தை மதிப்பிழக்கச் செய்கின்றான். தன்னில் உள்ள கிறிஸ்துவின் சாயலை மங்கச் செய்கின்றான் என்பதுவே உண்மையென்பதை உணர்ந்து, மறுபடியும் மறுபடியும், பாவத்திலேயே உழல்வதைத் தவிர்க்க வேண்டும் என்பதுவே எதிர்நோக்கின் திருப்பயணிக்கான புனிதத்துவ வாழ்வாகும்.

இந்த அருளின் காலமானது இத்தகைய தெளிவைத் தந்தாலே நல்லது.

தூய ஆவியைத் தாரும் இறைவா! மறுபடியும் என் பாவத்தால் உம்மை விழச் செய்யாதிருக்க வரம் தாரும். – ஆமென்.

பத்தாம் நிலை – ஆடைகள்

எதிர்நோக்கின் திருப்பயணிகளின் ஆடை முக்கியத்துவம் வாய்ந்தது.

ஆள்பாதி, ஆடை பாதி என்பான் தமிழன்.

பயணத்தில் இணைந்து, இயைந்து பயணிக்கும் போது, பவுல் கூறும் ஆடைகளை அணிந்து செல்வதுவே சாலச் சிறந்தது.

கோயில் கொடை, திருமணம், பொது நிகழ்வுகள் என இன்றைக்கு எல்லாவற்றிக்கும் ஆடை பொதுவானதாக அணிந்து கொள்கின்ற அற்புதக் காட்சி அரங்கேறி வருகின்றது. காண கண் கொள்ளாது இருக்கின்றது என்பதுவே உண்மையும் கூட.

இது சரியென்றால், திருப்பயணிகளின் ஆடையும் ஒன்றாக இருத்தலில் என்ன பிரச்சனை?

உண்மையை இடைக்கச்சையாக, நீதியை மார்புக் கவசமாக, அமைதி, நம்பிக்கை, மீட்பு, கடவுளின் வார்த்தை இவற்றை அணிந்தவர்களாக பவனி வர அழைப்புத் தருகின்றார் பவுல். எபேசியர் 06 : 14

நம்முடைய பயணத்தில் இவற்றை நாம் ஆடையாக, அணிகலனாகக் கொண்டிருக்கின்றோமா?

இனியாவது இறைவார்த்தையின் ஒளியில், ஆடையை அணிந்து, அவனியை அழகுறச் செய்வோம்.

இறைவா! இத்தகைய ஆடை, அணிகலன்களில் நாட்டம் தாரும். – ஆமென்.

பதினொன்றாம் நிலை – சகஜமே!

எதிர்நோக்கின் திருப்பயணிகளின் பயணத்தில் எதிர்கொள்ளும் மற்றொரு சவால், அவமானம், ஏளனம்.

கட்டாந்தரையில் கப்பல் கட்டியவருக்கு அன்றைக்கு ஏளனம், பகடி இருந்து இருக்குமா? என்றால் கண்டிப்பாக. தன் மகனைப் பலியாக்க அழைத்துச் சென்ற ஆபிரகாமுக்கு பகடி, ஏளனம் நிச்சயமாக இருந்திருக்க வேண்டும். யோபுக்கு அவருடைய மனைவியே ஏளனமாகப் பேசி, கடவுளைத் தூற்றினாள் என்பது விவிலிய செய்தித்தானே.

இப்படி விவிலியத்தின் ஒளியில் பயணிக்கின்ற திருப்பயணிக்கு இன்றைக்கும் பிழைக்கத் தெரியாதவன், மூடன், மடையன், இளிச்சவாயன் எனப் பல வகைகளில் பலரிடமிருந்து கிடைக்கும் ஏளனமும், பகடிப் பேச்சும் சர்வ சாதாரணமானது.

இவற்றின் மத்தியிலும் நம்முடைய நம்பிக்கையை இறுதிவரை உறுதியான மனநிலையோடு கொண்டு செல்லுதல் என்பது அவசியமானது என்பதையே விவிலிய மாந்தர்கள் சொல்லித்தரும் பாடமாகும்.

இறைவா! அன்றைய மூப்பர்களிடம் விளங்கிய உறுதியான மனநிலையை நாங்கள் பெறச் செய்தருளும். – ஆமென்.

பன்னிரண்டாம் நிலை – மரணம்

எதிர்நோக்கின் திருப்பயணிகள் அத்தனை பேரும் அடைய வேண்டிய நாட்டை அடைந்தார்களா? என்றால் இல்லையென்பதுவே உண்மை. மோசே உட்பட பலர் அடையவில்லை. ஆனால் பயணித்தார்களா? என்றால் ஆம் என்பதுவே உண்மை. நீ அடையமாட்டாய் என்றவுடன் தங்களது பயணம் தேவையற்றது என்று கருதவில்லை.

மரணம் என்பது தவிர்க்க முடியாத ஒன்று; எல்லாருக்குமான ஒன்று. யாருக்கு? எப்பொழுது? என்பது யாரும் அறியாத ஒன்று. நான் அடைவேனோ? மாட்டேனோ? என்றும், என்னவர்கள் பயணத்தில் என்னோடு இல்லை, மரணித்து விட்டார்கள் என்றோ, நான் பயணிக்காமல் இருந்துவிட இயலாது.

மரணமும் மறுவாழ்வுக்கான பிறப்பே என்ற நம்பிக்கையில் பயணித்துக் கொண்டே இருப்பதுதான் சிறப்பு. விபத்துகள், ஆபத்துகள் இருக்கின்றன என்று யாரும் எங்கும் பயணிக்காமலா இருக்கின்றோம்?

இறைவா! மரணத்தைக் குறித்த சரியானப் புரிதலை எமக்குத் தாரும். – ஆமென்.

பதின்மூன்றாம் நிலை – மனதில் இருத்தி...

வேதனை, வியாகுலங்கள், கண்ணீர் என்பது எதிர்நோக்கின் திருப்பயணிகளுக்கும் உரித்தானதுதான்.

பெத்தவர்களால் பிள்ளைகளுக்கும், பிள்ளைகளால் பெத்தவர்களுக்கும், கரம்பிடித்தவர்களால், நண்பர்களால், உடன்பிறப்புகளால், ஆள்வோரால், யாரால் கூட யாருக்கும் ஏற்படக்கூடியதே.

பயணத்தின் களைப்பாக இருக்கலாம், பயணத்தின் ஏமாற்றமாக இருக்கலாம், பயணத்தில் ஏற்படும் இழப்பாக இருக்கலாம், பயணத்தில் கிடைக்காத ஒத்துழைப்பாக இருக்கலாம், பயணத்தில் இல்லாத திட்டமிடலாக இருக்கலாம், பயணத்தில் கொடுக்கப்படும் புறக்கணிப்பாகக் கூட இருக்கலாம், இவையெல்லாமே நமக்கு வேதனை, வருத்தம், கண்ணீர், நோவு இவற்றை தந்து கொண்டே தான் இருக்கும். எல்லாவற்றையும் எல்லாரும் புரிந்து கொள்ளவும் முடியாது. எல்லாவற்றையும் எல்லாராலும் ஏற்றுக் கொள்ளவும் முடியாது.

மரியன்னையின் அற்புதப் பாடம், எதுவாகினும் உள்ளத்தில் இருத்தி சிந்திப்பதே சிறப்பானது.

பயணத்தில் எந்தக் குழப்பமும் இன்றி, எல்லாவற்றையும் புரிந்து கொள்ள வேண்டும் என்று கருதாமல் நம்பிக்கையொன்றையே நங்கூரமாகக் கொண்டு பயணிப்பதே, எதிர்நோக்கின் திருப்பயணிக்களுக்கான வாழ்வு. மரியன்னையின் அற்புதப் பாடமும், வாழ்வும் இதனையே சொல்லி நிற்கின்றது.

மனதில் இருத்துவோம். தியானிப்போம், செபிப்போம், அருள் பெறுவோம்.

இறைவா! தாயின் பிள்ளைகளாகிய நாங்கள் அவர்களின் மனநிலை கொண்டு பயணிக்க வரம் தாரும். – ஆமென்.

பதினான்காம் நிலை – அடக்கம்

“அடக்கம் அமரருள் உய்க்கும்” என்பது வள்ளுவனின் வாக்கு. அடக்கம் கொண்ட மனிதன் மற்றவர்களின் மதிப்பைப் பெற்றவராக இருப்பார்.

எதிர்நோக்கின் திருப்பயணிகளுக்கு அவசியமாக வேண்டிய பண்பு அடக்கம்தான்.

ஆடி, அடங்கும் வாழ்க்கையில் ஆர்ப்பாட்டம், ஆடம்பரம், வறட்டுக் கௌரவம், வீண்பேச்சு, வெட்டிப்பேச்சு நம்மை மதிப்பிழக்கச் செய்கின்றது என்பதுவே உண்மை.

இருக்கிற இடம் தெரியாமல் இருந்து போகவும், வலது கை கொடுப்பதை இடது கை அறியாது செய்வதுவும், வீட்டுச் சத்தம் வெளியில் கேட்காது பேசி வாழ்வதுவும் வாழ்க்கைதான் என்பதுவே கற்றுக் கொள்ளப்பட வேண்டிய ஒன்று.

எதிர்நோக்கின் திருப்பயணிகளாகிய நாம் நம்முடைய இக்கால வாழ்வில் அல்ல, மாறாக அடுத்த வாழ்வில் நம்பிக்கை கொண்டு, இக்கால வாழ்க்கையில் அர்த்தத்தோடு வாழ்ந்து செல்வதுவே அறிவார்ந்த செயலாகும்.

இறைவா! ஞானத்தைத் தந்து என் வாழ்வை அர்த்தமுள்ளதாக்கிக் கொள்ள அருள்தாரும். – ஆமென்.

முடிவுரை

பயணங்கள் தொடர் கதையே.

பயணங்கள் முடிவதில்லையே.

பாதைகள் சொல்லும் பாடங்கள், பயணத்தின் கால ஓட்டத்தில் கற்றுத் தரும் காரியங்கள் ஏராளம், ஏராளம்.

இந்த யூபிலி ஆண்டிலும், இயேசுவின் பிறந்த 2025 ஆண்டிலும் அந்தச் சிலுவைப்பாதைகள் நமக்குக் கற்றுத் தரும் பாடங்கள் நம் வாழ்வைப் புதுப்பிக்கட்டும், புடமிட்டும்.

தொடர்ந்து கேட்டவைகள் நம் செவிகளில் ரீங்காரமிடட்டும்.

அசைபோடுவோம். ஆர்வத்தோடு வாழ்வை மாற்றுவோம். எதிர்நோக்கில் தொடர்ந்து பயணிப்போம்.

இறையருள் பெறுவோம்.